**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண.50/2013 நாள்: 03.12.2020

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : ரமேஷ் |
| தந்தை பெயர் | : உண்ணாமலை |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

**<u>கூடுதல் முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

எனவே எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**<u>4 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.</u>**